# கிராமப்புற நடத்தை விதி

## இது பூங்காக்கள் மற்றும் நீர்வழிகள், கடற்கரை மற்றும் கிராமப்புறங்களை மகிழ்ச்சியுடன் அனுபவிப்பதற்கான உங்கள் வழிகாட்டியாகும்

**உள்ளடக்கங்கள்**


- அனைவருக்கும் மதிப்பளியுங்கள் »
- சுற்றுச்சூழலைப் பாதுகாத்திடுங்கள் »
- வெளிப்புறங்களை மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள் »
- கிராமப்புறங்களின் அடையாளங்களையும், சின்னங்களையும் அறிந்து கொள்ளுங்கள் »

# அனைவருக்கும் மதிப்பளியுங்கள்

- கிராமப்புறங்களில் வசிப்பவர்கள், வேலை செய்பவர்கள் மற்றும் ரசிப்பவர்கள் போன்றோரிடம் கனிவன்புடன் நடந்துகொள்ளுங்கள்
- நுழைவாயில்கள் மற்றும் பொருட்களைக் காணும்போது அது இருக்கும் நிலையிலே விட்டுவிடுங்கள்
- நுழைவாயில்கள் அல்லது வாகனப் பாதைகளுக்கான அணுகலைத் தடுக்கும் வகையில் வாகனங்களை நிறுத்தாதீர்கள்
- இனிமையானவராக இருங்கள், வணக்கம் சொல்லுங்கள், இடத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள்
- உள்ளூர் குறியீடுகளைப் பின்பற்றுங்கள், அகலமான அணுகல் கிடைக்கும் வரை குறியிடப்பட்ட பாதைகளில் செல்லுங்கள்

## விவசாயம், கால்நடைகள் மற்றும் வனவிலங்குகள்

உங்கள் செயல்கள் மற்றவர்களின் வாழ்க்கையையும், வாழ்வாதாரத்தையும் பாதிக்கலாம்.

கிராமப்புறங்களில் பணிபுரியும் மக்களுடன் ஒத்துழையுங்கள். எடுத்துக்காட்டாக, விலங்குகள் அழைத்துச் செல்லப்படும்போது அல்லது ஒன்றுகூட்டப் படும்போது விவசாயியின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுங்கள். இது அனைவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க உதவுகிறது.

நுழைவாயில்கள் மற்றும் பொருட்களைக் காணும்போது அது இருக்கும் நிலையிலே விட்டுவிடுங்கள் அல்லது குறியீடுகளில் உள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுங்கள். குழுவாக இருக்கும்போது, நுழைவாயில்களை எவ்வாறு இருக்கும் நிலையிலே விட வேண்டும் என்பது கடைசி நபருக்கு தெரிந்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். விவசாயிகள் விலங்குகளை அடைப்பதற்காக நுழைவாயில்களை மூடுகிறார்கள் அல்லது உணவு மற்றும் தண்ணீரை விலங்குகள் அணுகுவதற்காக நுழைவாயில்களை திறந்து வைக்கிறார்கள். பண்ணை இயந்திரங்கள், குதிரைகள் அல்லது கால்நடைகளுக்குக் குறுக்கீடு விளைவிக்க வேண்டாம். ஒரு பண்ணை விலங்கு துன்பத்தில் இருப்பதாக நீங்கள் நினைத்தால், விவசாயியை எச்சரிக்க முயற்சி செய்யுங்கள்.

வனவிலங்குகள், கால்நடைகள் மற்றும் குதிரைகள் நடமாட அதிக இடம் கொடுங்கள். அவற்றின் நடத்தை கணிக்க முடியாததாக இருக்கலாம், குறிப்பாக அவை தங்களின் குட்டிகளுடன் இருக்கும்போது நீங்கள் காயமடையக்கூடும்.

கால்நடைகள், குதிரைகள் அல்லது வனவிலங்குகளுக்கு உணவளிப்பது அவற்றுக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதால் அவற்றுக்கு உணவளிக்க வேண்டாம்.

## கிராமப்புறத்தில் பயணம் செய்தல் மற்றும் வாகனங்களை நிறுத்துதல்

கிராமப்புறச் சாலைகளில் போக்குவரத்து இருப்பது மக்களுக்கும், வனவிலங்குகளுக்கும் ஆபத்தானதாக இருக்கலாம்.

கிராமப்புறச் சாலைகளில் வாகனம் ஓட்டும்போது வேகத்தைக் குறைத்துக் கவனமாக ஓட்டுங்கள். நுழைவாயில்கள் அல்லது வாகனப் பாதைகளுக்கான அணுகலைத் தடுக்கும் வகையில் வாகனங்களை நிறுத்தவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். அவசரகால வாகனங்கள் அணுகுவதற்கு எப்போதும் வழிவிடுங்கள்.

வெளிப்புறங்களுக்குச் செல்லும்போது உங்கள் காரை வீட்டிலேயே விட்டுச்செல்வதைக் கருத்தில் கொள்ளுங்கள். அதற்குப் பதிலாக நீங்கள் பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தலாம். Traveline வலைத்தளத்தில் பொதுப் போக்குவரத்து தொடர்பான தகவல்களைக் கண்டறியுங்கள்.

ரயில் பாதையை கடக்கும் இடத்தில் கூடுதல் கவனம் எடுத்துக்கொள்ளுங்கள் மற்றும் எச்சரிக்கையாக இருங்கள். நீங்கள் Network Rail வலைத்தளத்தில் ரயில் கடக்கும் பாதைகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டலைக் கண்டறியலாம்.

நடைபாதை இல்லாத சாலையில் நடக்கும்போது வாகனங்கள் உங்கள் எதிர்திசையில் வரும் வகையில் நடந்திடுங்கள், மேலும் நெடுஞ்சாலை நடத்தை விதியைப் பின்பற்றுங்கள்.

## இனிமையானவராக இருங்கள், வணக்கம் சொல்லுங்கள், இடத்தைப் பகிர்ந்துகொள்ளுங்கள்

நீங்கள் வெளிப்புறங்களில் நேரம் செலவிடும்போது, பிற பயனர்களையும், விலங்குகளையும் காணலாம். வாகனம் அல்லது சைக்கிள் ஓட்டும்போது குதிரைகள், நடந்து செல்பவர்கள் மற்றும் கால்நடைகளுக்காக வேகத்தைக் குறையுங்கள் அல்லது நிறுத்துங்கள். எப்போதும் அவர்களுக்கு அதிக இடமளியுங்கள்.

சைக்கிள் ஓட்டுநர்கள் குதிரைப்பாதைகளில் செல்லும்போது நடந்து செல்பவர்கள் மற்றும் குதிரை சவாரிகளுக்கு வழிவிட வேண்டியது கட்டாயமாகும்.

சைக்கிள் ஓட்டுநர்களும், குதிரை சவாரிகளும் நடந்து செல்பவர்களின் பாதுகாப்புக்கு மதிப்பளிக்க வேண்டும், அதேசமயம் நடந்து செல்பவர்களும் அவர்களின் வழியை மறிக்கவோ, அவர்களுக்கு ஆபத்து ஏற்படும் வகையில் நடந்துகொள்ளவோ கூடாது.

## உள்ளூர் குறியீடுகளைப் பின்பற்றுங்கள், குறிக்கப்பட்ட பாதைகளில் செல்லுங்கள்

நீங்கள் செல்வதற்கான வழியைக் கண்டறிய உதவுவதற்கு வரைபடங்கள் மற்றும் உள்ளூர் குறியீடுகளைப் பயன்படுத்துங்கள். திறந்த அணுகல் நிலம் போன்ற அகலமான அணுகல் கிடைக்காத பட்சத்தில், குறிக்கப்பட்ட பாதைகள் சேறும் சகதியுமாக இருந்தாலும் கூட அவற்றைவிட்டு விலகாமல் செல்லுங்கள். இது பயிர்களையும், வனவிலங்குகளையும் பாதுகாக்க உதவுகிறது.

கிராமப்புறங்களில் பயன்படுத்தப்படும் குறியீடுகள் மற்றும் சின்னங்கள் பற்றி அறிந்து கொள்ளுங்கள். கிராமப்புறங்களில் உள்ள வெவ்வேறு பயனர்களுக்கான வழித்தடங்களை அடையாளம் காண அவை உங்களுக்கு உதவுகின்றன.

உங்களால் முடிந்தவரையில் பண்ணை நிலத்தின் எல்லைகளில் உள்ள நுழைவாயில்கள், நெடுஞ்சட்டங்கள் அல்லது இடைவெளிகளைப் பயன்படுத்துங்கள். எல்லைகளில் உள்ள வேலிகள் மீது ஏறுவது அவற்றைச் சேதப்படுத்தி, கால்நடைகளை ஆபத்தில் ஆழ்த்தும்.

ஒரு குறியீடு சட்டவிரோதமானது அல்லது தவறாக வழிநடத்துகிறது என்று நீங்கள் நினைத்தால் உள்ளூர் அதிகாரி ஐத் தொடர்பு கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக, பொது நடைபாதையில் வைக்கப்பட்டிருக்கும் 'தனியார் - நுழைய அனுமதி இல்லை' என்ற குறியீடு.

# சுற்றுச்சூழலைப் பாதுகாத்திடுங்கள்

- உங்கள் குப்பைகளை வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள் – நீங்கள் வந்து சென்றதற்கான எந்தத் தடத்தையும் விட்டுச் செல்லாதீர்கள்
- தீ மூட்டக் கூடாது, மேலும் உரிய குறியீடுகள் இருக்குமிடத்தில் மட்டுமே BBQ-களைப் பயன்படுத்தவேண்டும்
- உங்கள் நாய்களை எப்போதும் உங்கள் கட்டுப்பாட்டிலும், உங்கள் பார்வையில் இருக்கும்படியும் வைத்திருங்கள்
- நாய் மலம் - அதைப் பையில் சேகரித்து, ஏதேனும் பொதுக் குப்பைத் தொட்டியில் போடுங்கள்
- இயற்கை மீது அக்கறை காட்டுங்கள் - சேதம் அல்லது தொந்தரவை ஏற்படுத்த வேண்டாம்

The Countryside Code

RESPECT • PROTECT • ENJOY

தற்போதைய மற்றும் வருங்காலச் சந்ததியினருக்காக நமது கிராமப்புறங்களையும், திறந்தவெளிகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

இயற்கை மீது அக்கறை காட்டுங்கள் - சேதம் அல்லது தொந்தரவை ஏற்படுத்த வேண்டாம். நீங்கள் பாறைகள், கற்கள், தாவரங்கள் மற்றும் மரங்களைக் காணுகையில் அவற்றைத் தொடாமல் விலகிச் செல்லுங்கள். மேலும் தரையில் கூடு கட்டும் பறவைகள் உள்ளிட்ட வனவிலங்குகளுக்கு இடையூறு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

இடிபாடுகள் அல்லது வரலாற்றுச் சிறப்புவாய்ந்த இடங்களைத் தொந்தரவு செய்யாதீர்கள் - இயற்கை மற்றும் கட்டிட சூழமைவு ஆகியவற்றில் உள்ள நமது பாரம்பரியம் மிகவும் முக்கியமானதாகும்.

## உங்கள் குப்பைகளை வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள் – நீங்கள் வந்து சென்றதற்கான எந்தத் தடத்தையும் விட்டுச் செல்லாதீர்கள்

உங்களுடன் ஒரு பையைக் கொண்டு வந்து உங்கள் குப்பைகளையும், உணவுக் கழிவுகளையும் அதில் போட்டு வீட்டிற்கு எடுத்துச் செல்லுங்கள், பொதுக் குப்பைத் தொட்டிகளைப் பயன்படுத்துங்கள் அல்லது முடிந்தால் மறுசுழற்சி செய்யுங்கள். குப்பைகள் கிராமப்புறங்களின் அழகைக் கெடுக்கும், மேலும் அவை வனவிலங்குகளுக்கும், கால்நடைகளுக்கும் ஆபத்தானவை. குப்பைகளை விட்டுச் செல்வதும், குப்பை போடுவதும் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

## தீ மூட்டக் கூடாது, மேலும் உரிய குறியீடுகள் இருக்குமிடத்தில் மட்டுமே BBQ-களைப் பயன்படுத்த வேண்டும்

காப்பற்ற தீச்சுவாலைகள் (naked flames) மற்றும் சிகரெட்டுகளில் கவனமாக இருங்கள். குறியீடுகள் மூலம் அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே BBQ-களைப் பயன்படுத்துங்கள். எப்போதும் உங்கள் BBQ-ஐ வெளியே வைக்கவும், சாம்பல் குளிர்ச்சியடைந்து இருப்பதை உறுதிசெய்து அவற்றைப் பொறுப்புடன் அப்புறப்படுத்துங்கள். தீயானது மக்கள் மற்றும் பொருட்களுக்கு ஏற்படுத்துவது போலவே வனவிலங்குகளுக்கும், வாழ்விடங்களுக்கும் பேரழிவை ஏற்படுத்தலாம்.

அக்டோபர் 1 முதல் ஏப்ரல் 15 வரை சில நில மேலாளர்களால் விவசாயத்தை நிர்வகிக்க, குறிப்பாக புதர்செடிகள் மற்றும் முட்புதர்களை எரிப்பதற்காகக் கட்டுப்படுத்தப்பட்ட தீ பயன்படுத்தப்படுகிறது. கவனிப்பாரின்றி எரியும் தீயைக் கண்டால் நீங்கள் 999 என்ற எண்ணிற்கு அழையுங்கள்.

## உங்கள் நாய்களை எப்போதும் உங்கள் கட்டுப்பாட்டிலும், பார்வையில் இருக்கும்படியும் வைத்திருங்கள்

கிராமப்புறங்கள், பூங்காக்கள் மற்றும் கடற்கரை ஆகியவை உங்கள் நாய் உடற்பயிற்சி செய்ய சிறந்த இடங்கள், ஆனால் நீங்கள் மற்ற பயனர்களையும் வனவிலங்குகளையும் கருத்தில்கொள்ள வேண்டும்.

வனவிலங்குகள், கால்நடைகள், குதிரைகள் மற்றும் பிற நபர்களிடமிருந்து உங்கள் நாய் தள்ளி இருப்பதை உறுதிசெய்வதற்கு உங்கள் நாயைத் திறம்பட்ட கட்டுப்பாட்டில் வைத்திருங்கள். நீங்கள் செய்ய வேண்டியவை:

- உங்கள் நாயின் கழுத்திலுள்ள பற்றுக் கயிற்றை எப்போதும் பிடித்துக் கொண்டிருங்கள் அல்லது உங்கள் பார்வையில் இருக்கும்படி வைத்திருங்கள்
- உங்கள் நாய் உங்கள் கட்டளைக்குக் கீழ்படிவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்
- நீங்கள் அணுகுவதற்கு உரிமையுள்ள பாதை அல்லது பகுதியிலிருந்து உங்கள் நாய் விலகிச் செல்லவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்

வருடத்தின் அனைத்து நாட்களிலும் அல்லது குறிப்பிட்ட நாட்களில் உங்கள் நாயின் பற்றுக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு அதை அழைத்துச் செல்ல வேண்டிய சூழ்நிலைகள் இருப்பதால், எப்போதும் உள்ளூர் குறியீடுகளை அறிந்து கொள்ளுங்கள். உள்ளூர் பகுதிகளும் கூட உதவிபுரியும் நாய்களைத் தவிர மற்ற நாய்களை முற்றிலுமாக தடைசெய்யக்கூடும். இந்த உள்ளூர் கட்டுப்பாடுகளைப் பற்றி குறியீடுகள் உங்களுக்குத் தெரிவிக்கும்.

கால்நடைகள் சூழ்ந்திருக்கும் இடங்களில் உங்கள் நாயின் பற்றுக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு அழைத்துச் செல்வது நல்ல நடைமுறையாகும்.

திறந்த அணுகல் நிலத்திலும், கடற்கரையிலும், கால்நடைகளுக்கு அருகில் செல்லும்போது உங்கள் நாயின் பற்றுக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு அழைத்துச் செல்ல வேண்டும். மார்ச் 1 முதல் ஜூலை 31 வரை, கால்நடைகள் இல்லாததிறந்த அணுகல் நிலத்தில் கூட உங்கள் நாயின் பற்றுக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு அழைத்துச் செல்ல வேண்டும். இவை சட்டப்பூர்வமான தேவைகளாகும்.

ஒரு விவசாயி கால்நடைகளைத் தாக்குகின்ற அல்லது துரத்துகின்ற நாயைச் சுட முடியும். நாயின் உரிமையாளருக்கு இழப்பீடு அளிக்க அவர் பொறுப்பாக மாட்டார்.

கால்நடைகள் அல்லது குதிரைகளால் நீங்கள் அச்சுறுத்தப் படுவதாக உணர்ந்தால், உங்கள் நாயின் பற்றுக் கயிற்றை அவிழ்த்து விடுங்கள். உங்கள் நாயைப் பாதுகாப்பதற்காக நீங்கள் காயமடைய வேண்டாம். உங்கள் நாயை விடுவிப்பது நீங்கள் இருவருமே பாதுகாப்பான இடத்திற்குச் செல்வதை எளிதாக்கும்.

நாய் நடைபயிற்சிக்கான நடத்தை விதி உங்களுக்குக் கூடுதல் தகவல்களை வழங்கலாம்.

## நாய் மலம் - அதைப் பையில் சேகரித்து குப்பைத் தொட்டியில் போடுங்கள், எந்தப் பொதுக் குப்பைத் தொட்டியிலும் போடலாம்

உங்கள் நாயின் மலத்தை எப்போதும் சுத்தம் செய்யுங்கள், ஏனெனில் இது மக்கள், கால்நடைகள் மற்றும் வனவிலங்குகளுக்கு நோயை ஏற்படுத்தலாம்.

நாயின் மலம் அடங்கிய பைகளை பின்னர் எடுத்துச் செல்வதற்கு நீங்கள் திட்டமிட்டாலும் கூட, ஒருபோதும் அங்கேயே வைத்துவிட்டுச் செல்லக் கூடாது - நாற்றமகற்றும் பைகள் மற்றும் கொள்கலன்கள் நாயின் மலம் அடங்கிய பைகளை எடுத்துச் செல்வதை எளிதாக்குகின்றன. நீங்கள் ஒரு பொதுக் குப்பைத் தொட்டியைக் கண்டறிய முடியாவிட்டால், அதை வீட்டிற்கு எடுத்துச் சென்று உங்கள் வீட்டுக் குப்பைத் தொட்டியில் போடுங்கள்.

# வெளிப்புறங்களை மகிழ்ச்சியுடன் அனுபவியுங்கள்

- உங்கள் வழித்தடத்தையும், உள்ளூர் நிலைமைகளையும் அறிந்துகொள்ளுங்கள்
- உங்களின் சிலிர்ப்பான அனுபவத்திற்குத் திட்டமிடுங்கள் - எதை எதிர்பார்க்கலாம், என்ன செய்ய முடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்
- உங்கள் சுற்றுலாவை மகிழ்ச்சியுடன் அனுபவித்து, மறக்க முடியாத தருணங்களை உருவாக்குங்கள்

உங்கள் நல்வாழ்வுக்கு வெளிப்புறங்கள் சிறந்தவையாகும். இது இளைப்பாறுவதற்கு, அமைதியைப் பெறுவதற்கு மற்றும் செயல்பாடுகளை மேற்கொள்வதற்கான ஒரு இடமாகும். நீங்கள் வெளிப்புறங்களில் செய்ய விரும்புவது எதுவாக இருந்தாலும், நீங்கள் முன்கூட்டியே தயார் செய்தால் அதை அதிக மகிழ்ச்சியுடன் அனுபவிப்பீர்கள்.

## உங்கள் வழித்தடத்தையும், உள்ளூர் நிலைமைகளையும் சரிபாருங்கள்

உங்கள் வழித்தடத்தை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா என்பதையும், உங்களுக்குத் தேவையான வரைபடங்கள் உங்களிடம் உள்ளனவா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நீங்கள் புறப்படுவதற்கு முன்பு புதுப்பிக்கப்பட்ட வரைபடங்கள், வழிகாட்டிகள் அல்லது வலைத்தளங்களைப் பார்க்கவும்.

நீங்கள் வெளிப்புறப் பொழுதுபோக்குக் குழுக்களிடமிருந்து நிபுணத்துவ நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகளைப் பெறலாம். Getoutside அல்லது Visit Britain போன்ற வலைத்தளங்கள் இந்தக் குழுக்களின் பட்டியலை உங்களுக்கு வழங்க முடியும். தகவல் மையங்களும் கூட உங்களுக்கு உள்ளூர் பரிந்துரைகளையும், ஆலோசனைகளையும் வழங்க முடியும்.

## வானிலை, அலை மற்றும் தண்ணீர் நிலைமைகளை அறிந்துகொள்ளவும்

நீங்கள் புறப்படுவதற்கு முன்பு வானிலை முன்னறிவிப்புகளை அறிந்துகொள்ளவும். மலைகள் மற்றும் கடற்கரை ஓரங்களில் நிலைமைகள் விரைவாக மாறக்கூடும். நீங்கள் புறப்பட்டுவிட்ட பிறகு வழியில் நிலைமைகள் மாறினால் பயணத்தை ரத்துசெய்துவிட்டு வீட்டிற்குத் திரும்ப தயங்காதீர்கள்.

உயரும் அலைகளால் பயணம் தடைபடும் அபாயத்தைக் குறைக்க நீங்கள் புறப்படுவதற்கு முன்பு அலை வீசும் நேரங்களை ஆராய்ந்து அறியுங்கள். கடல் மட்டுமல்லாது சில நதிகளும் அலைகளின் மாற்றத்தால் பாதிக்கப்படுகின்றன. வழுக்கும் பாறைகள் மற்றும் கடற்பாசி ஆகியவை குறித்து கவனமாக இருங்கள்.

நீங்கள் துடுப்புப் படகை ஓட்டுவதற்கு, நீந்துவதற்கு அல்லது நீரில் நனைந்து மகிழ்வதற்கு விரும்பினால், நீரின் தரம் மற்றும் நிலைமைகளை அறிய சுற்றுச்சூழல் முகமையின் வலைத்தளத்தைப் பாருங்கள்.

## உங்களின் சிலிர்ப்பான அனுபவத்திற்குத் திட்டமிடுங்கள் - எதை எதிர்பார்க்கலாம், என்ன செய்ய முடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்

நீங்கள் எங்கு செல்கிறீர்கள், எப்போது திரும்பி வருவீர்கள் என்பதை யாரேனும் ஒருவரிடம் சொல்லுங்கள். கிராமப்புறங்களில் நீங்கள் மணிக்கணக்கில் யாரையும் காண முடியாமல் போகலாம், மேலும் தொலைபேசி சமிக்ஞைகள் பல இடங்களில் கிடைக்காமல் போகலாம்.

உங்களின் பாதுகாப்புக்கும், உங்கள் பராமரிப்பில் உள்ள மற்றவர்களின் பாதுகாப்புக்கும் நீங்களே பொறுப்பு ஆகும். உங்கள் நடவடிக்கைக்குத் தேவையான திறன்களும், அறிவும் உங்களுக்கு இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

பாதுகாப்பாக இருப்பதற்கு, வானிலை மாற்றங்கள் உள்ளிட்ட இயற்கை ஆபத்துகளை எதிர்கொள்ளத் தயாராக இருங்கள். உங்களின் திட்டமிட்ட செயல்பாடுகளுக்குத் தகுந்த ஆடைகளையும், உபகரணங்களையும் எடுத்துச் செல்வதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் செல்வதற்குத் திட்டமிட்டுள்ள இடங்களில் பார்வையாளர்கள் அதிகமாக இருந்தால், உங்கள் திட்டங்களை மாற்றிக்கொள்ளத் தயாராக இருங்கள்.

## உரிமைகள் மற்றும் அனுமதிகள்

இந்த நடத்தை விதி வெவ்வேறு விதமான பயனர்களின் உரிமைகள் பற்றிய தகவல்களை வரையறுக்கிறது. சில செயல்பாடுகளுக்கு நீங்கள் நில உரிமையாளரிடமிருந்து அனுமதி பெற வேண்டியிருக்கலாம், அவற்றில் உள்ளடங்குவன:

- முகாமிடுதல்
- நன்னீரில் நீச்சலடித்தல்
- நன்னீரில் மீன்பிடித்தல்

உங்கள் சுற்றுலாவை மகிழ்ச்சியுடன் அனுபவித்து, மறக்க முடியாத தருணங்களை உருவாக்குங்கள்.

# கிராமப்புறங்களின் அடையாளங்களையும், சின்னங்களையும் அறிந்து கொள்ளுங்கள்

கிராமப்புறங்களில் பயன்படுத்தப்படும் சின்னங்களின் உள்ளடங்குவன:

## மஞ்சள் நிற அம்புக்குறி



## நீல நிற அம்புக்குறி



## ஊதா நிற அம்புக்குறி



## சிவப்பு நிற அம்புக்குறி - அனைத்து போக்குவரத்திற்கும் திறந்திருக்கும் கிளைவழி (BOAT)



## ஒரு ஏகோர்ன் சின்னம்



தேசியத் தடம், இது நடைபயிற்சிக்காக உருவாக்கப்பட்டது, சில தடங்களில் குதிரை சவாரி மற்றும் சைக்கிளோட்டமும் சாத்தியமாகும். கட்டுப்படுத்தப்பட்ட நடமாட்டத்தைக் கொண்ட பயனர்கள், தடத்தின் ஏற்புத்தன்மையைச் சரிபார்க்க National Trail வலைத்தளத்தைப் பார்வையிடலாம். இந்த வலைத்தளத்தில் வரைபடங்கள், பயணத் திட்டமிடல் கருவிகள் மற்றும் தடம் திசைதிருப்பல் ஆகிய தகவல்களும் உள்ளடங்கியுள்ளன. இந்த சின்னம் இங்கிலாந்து கடற்கரை பாதை உட்பட இங்கிலாந்து மற்றும் வேல்ஸில் உள்ள 16 நீண்ட தூர வழித்தடங்களைக் குறிக்கிறது.

## மலைகள் மீது நடந்து செல்லும் ஒரு நபரைக் கொண்ட வட்ட பழுப்பு நிறச் சின்னம்



திறந்த அணுகல் குறியீடு, இங்கு நீங்கள் பாதைகளிலிருந்து விலகி ஆராயலாம். இதில் பின்வருவனவற்றின் பல பகுதிகள் அடங்கும்:

- மலை
- முட்புதர்கள்
- புதர்செடி
- மலையடிவாரம்
- கடற்கரை விளிம்பு
- பதிவு செய்யப்பட்ட பொதுவான நிலம்

வரைபடங்கள், தகவல்கள் மற்றும் எந்தவொரு அணுகல் கட்டுப்பாடுகளுக்கும் Open Access வலைத்தளத்தைப் பார்க்கவும்.

## கம்பம் அல்லது நுழைவாயிலில் இடம்பெற்றிருக்கும் உள்ளூர் குறியீடு




அனுமதிக்கப்பட்ட பாதைகள், நில உரிமையாளர்கள் இந்த பாதைகளுக்குத் தானாக முன்வந்து அணுகலை வழங்குவதாலும், இவற்றை யார் பயன்படுத்தலாம் என்பதைத் தேர்வுசெய்வதாலும் உள்ளூர் குறியீடுகள் மீதிருக்கும் அறிவுரையைப் பின்பற்றுங்கள். சில திறந்த அணுகல் பகுதிகளும் கூட அதே வழியில் கிடைக்கின்றன.